*செ.வெ.எண்:18* *நாள்:06.09.2018*

நாகப்படடினம் மாவட்டத்தில் குடிமைப்பொருள் வழங்கல் தொடர்பான
மக்கள் குறைதீர் நாள் முகாம் 08.09..2018 (இரண்டாம் சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது.
மாவட்ட ஆட்சியர் முனைவர். சீ.சுரேஷ்குமார் இஆ.ப அவர்கள் தகவல்

உணவுப்பொருள் வழங்கல் தொடர்பான மக்கள் குறைதீர் நாள் முகாம் ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்த அரசு அறிவுறுத்தியதை தொடர்ந்து, நாகப்பட்டினம் மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் துறையால் செப்டம்பர் மாதம் 08.09..2018 (இரண்டாம் சனிக்கிழமை) அன்று கீழ்க்கண்ட கிராமங்களில் பொது விநியோகத்திட்ட மக்கள் குறைதீர் நாள் முகாம் நடத்தப்பட உள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில், மக்கள் குறைதீர் நாள் முகாம் பின்வரும் விவரப்படி குறிப்பிடப்பட்ட கிராமங்களில் உள்ள ஊராட்சி மன்ற கட்டிடத்தில் 08.09.2018 ஆம் தேதி காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது. நாகப்பட்டினம் வட்டம், புத்தகரம் கிராமத்தில் நாகப்பட்டினம் தனித்துணைஆட்சியர்(சபாதி) திருமதி.எம்..வேலுமணி அவர்கள் தலைமையிலும், திருக்குவளை வட்டம், மடப்புரம் கிராமத்தில் நாகப்பட்டினம் கூட்டுறவு சங்கங்களின் சரக துணைப்பதிவாளர் திருமதி.மு.பாத்திமா சுல்தானா அவர்கள் தலைமையிலும், வேதாரண்யம் வட்டம், கரியாப்பட்டினம் கிராமத்தில் நாகப்பட்டினம் கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் (பொ.வி.தி) திரு. கனகசபை பி.எஸ்ஸி அவர்கள் தலைமையிலும், மயிலாடுதுறை வட்டம், இளந்தோப்பு கிராமத்தில் மயிலாடுதுறை வருவாய் கோட்ட அலுவலர். திருமதி. கோ. தேன்மொழி பி.எஸ்ஸி.,அவர்கள் தலைமையிலும், தரங்கம்பாடி வட்டம், சந்திரப்பாடி கிராமத்தில் உதவி ஆணையர் (கலால்) திரு. N.வெங்கடேசன் பி.எஸ்ஸி., அவர்கள் தலைமையிலும், சீர்காழி வட்டம், மருதங்குடி கிராமத்தில் வருவாய் நீதிமன்றம் மயிலாடுதுறை தனித்துணை ஆட்சியர் திருமதி. வே.தெய்வநாயகி ,அவர்கள் தலைமையிலும், குத்தாலம் வட்டம், மங்கநல்லூர் கிராமத்தில் மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.இரா.காமராஜ் ,அவர்கள் தலைமையிலும் கீழ்வேளுர் வட்டம் மாணலூர் கிராமத்தில் கீழ்வேளுர் வட்ட வழங்கல்அலுவலர் திரு..ப்பி.தர்மராஜ் அவர்கள் தலைமையிலும் நடைபெறவுள்ளது.

மேற்கண்ட குறைதீர் நாள் மூகாம் நடைபெறும் கிராமங்களில் உள்ள பொதுமக்கள் அனைவரும் தங்களது நியாய விலைக்கடை சம்பந்தமான புகார்கள் மற்றும் குடும்ப அட்டை தொடர்பான பெயர் நீக்கல், சேர்த்தல், கடை மாற்றம், முகவரி மாற்றம், மற்றும் குடும்ப அட்டை மாற்றம் புதிய குடும்ப அட்டை கோருதல் போன்ற கோரிக்கைகளை நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்களிடம் மனுக்கள் மூலமாக தெரிவித்து குறைகளை தீர்வு செய்து பயன் பெறுமாறு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் முனைவர். சீ.சுரேஷ்குமார் இஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்